

தஞ்சாவூர் மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியம் உக்கடை ஊராட்சியில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதை வேளாண்மை– உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் , உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் ஆகியோர் நேற்று முன்தினம் (28.11.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம் , திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம். அரவிந்த், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், மற்றும் பலர் உடன் உள்ளனர்.



தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் மாநிலங்களவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோருடன் இணைந்து நேற்று முன்தினம் (28.11.2024) ஒன்றிய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை புது தில்லியில் சந்தித்தார்கள். இச்சந்திப்பின் போது தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து சுற்றுலாத்துறை மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு ஒன்றிய அரசின் அனுமதி மற்றும் நிதி உதவிக்காக இருக்கும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி உதவிகளை விரைவாக வழங்கிட கோரிக்கை விடுத்தார்கள். இச்சந்திப்பின் போது தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன் மற்றும் சுற்றுலாத் துறை இயக்குநர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# விமானப் பயணத்திற்கு விண்ணைத் தொடும் கட்டணமா?

## கழக மக்களவைக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, நவ.30-

சமீப நாட்களாக விமானப் பயணக் கட்டணங்களின் ஏற்றத்தாழ்வை குறிப்பிட்டும், அதிகத் தேவை ஏற்படும் காலங்களில் விமான நிறுவனங்கள் பயணக் கட்டணத்தை தங்கள் விருப்பம்போல் அதிகமாக நிர்ணயிப்பதைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மீண்டும் விமானப் போக்குவரத்துத்துறையில் அரசு சார்ந்த நிறுவனங்கள் களமிறக்கப்படுமா உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை ஒன்றிய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் வினவினார்.



அதன் விவரங்கள் வருமாறு:

கடந்த ஒரு ஆண்டில் விமானப் பயணக் கட்டணங்களில் அதிகமான ஏற்றத்தாழ்வு காணப்படுவது உண்மையா என்றும் குறிப்பாக, 40% விலை அதிகரித்திருப்பது உண்மையா என்றும் அவ்வாறெனில் அவற்றை குறைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

விமானப் பயணத்திற்கான அதிகத் தேவை ஏற்படும் காலங்களில், செக்டர் வாரியாக விமானப் பயணக் கட்டணத்திற்கென ஒரு சராசரி உச்சவரம்பை நிர்ணயிப்பதற்கான திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

விமானப் போக்குவரத்துத்துறை நிறுவனங்கள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்களுடன் இதுதொடர்பாக ஏதேனும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதா எனக் கேள்வி எழுப்பினார்.

தற்போது, விமான நிறுவனங்கள் பயணக் கட்டணங்களை நிர்ணயிப்பதில், பின்பற்றப்படும் அளவுகோல்கள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

விமான நிறுவனங்கள் தன்னிச்சையாக பயணக் கட்டணத்தை நிர்ணயிப்பதைத் தடுக்கவும், வெளிப்படைத்தன்மையோடு செயல்படுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

விமான நிறுவனங்களுக்கிடையே நியாயமான போட்டியை ஊக்குவிக்க ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை முன்மொழிகிறதா? அல்லது விமானப் பயணிகள் குறைந்த விலையில் பயணத்தை மேற்கொள்ள அரசு சார்ந்த நிறுவனங்கள் மீண்டும் அறிமுகப்படுத்தப்படுமா எனக் கேள்வி எழுப்பினார்.

### மழையால் பாதிப்பு ஏற்பட்ட மாவட்டங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

# ஓரிரு தினங்களில் பாதிப்பைக் கணக்கீடு செய்து உரிய நடவடிக்கை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

*சென்னை, நவ.30-*

*வடகிழக்கு பருவமழையால் பயிர் பாதிப்பு ஏற்படும் மாவட்டங்களில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் -எடுக்கப்படும் என்றும், ஓரிரு தினங்களில் மழைக்கு பின் பாதிப்புகள் உள்ள பயிர்கள் கணக்கெடுக்கப்படும் எனவும், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ளார்.*



*தமிழ்நாட்டின் இயல்பான மழையளவு 920 மி.மீ. இதில் 441.8 மி.மீ (48%) மழையளவு இயல்பாக வடகிழக்கு பருவமழையில் கிடைக்கிறது. வடகிழக்கு பருவமழையின் போது வெப்பமண்டல சூறாவளி மற்றும் அதனுடன் தொடர்புடைய புயல்கள் காரணமாக மாநிலம் அதிகபட்ச பேரிடர்களை சந்திக்கிறது. வடகிழக்கு பருவமழை இயல்பாக அக்டோபர் 1 முதல் துவங்கும். ஆனால், இவ்வாண்டு 16.10.2024 அன்று துவங்கி பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் டெல்டா மாவட்டங்களில் குறைந்தபட்சமாக கடலூர் மாவட்டத்தில் 57 மி.மீ மழையும், அதிகபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டத்தில் 148 மி.மீ மழையும் பதிவாகியுள்ளது.*

*இதனால் சுமார் 31,853 ஏக்கர் பரப்பில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்ட வயல்களில் நீர் சூழ்ந்துள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 18,972 ஏக்கர் பரப்பிலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 8,151 ஏக்கர் பரப்பிலும், திருவாரூர் மாவட்டத்தில் 2,391 ஏக்கர் பரப்பிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 2,339 ஏக்கர் பரப்பிலும் நீர் சூழ்ந்துள்ளது.*

*வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை / தோட்டக்கலை அலுவலர்கள் 1963 நபர்கள் மற்றும் உதவி வேளாண்மை/ தோட்டக்கலை அலுவலர்கள் 3945 நபர்கள் ஆகமொத்தம் 5908 நபர்கள் களப்பணியில் உள்ளனர். அவர்கள் விவசாயிகளுக்கு நீரினை வடிப்பது தொடர்பாகவும் அதன் பின் எடுக்க வேண்டிய ஆலோசனைகளையும் கீழ்க்கண்டவாறு வழங்கி வருகிறார்கள்.*

*விளை நிலங்களில் உள்ள சிறுசிறு பாசன மற்றும் வடிநீர் வாய்க்கால்களில் உள்ள, செடி கொடிகளை அகற்றிட வேண்டும். வடகிழக்கு பருவமழையின் போது வெள்ள மழைநீர் சூழ்ந்துள்ள வயல்களில் உள்ள அதிகப்படியான நீரை வெளியேற்றிட வேண்டும்.*

*வெள்ள மழைக்காலங்களில் உரம் இடுதல், பூச்சி மருந்து தெளித்தல், களைக் கொல்லி இடுதல் போன்றவற்றை தவிர்த்திட வேண்டும்.*

*மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நீர் வடிந்தவுடன் மேலுரமாக 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் ஆகியவற்றுடன் 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து ஒரு இரவு வைத்திருந்து 17 கிலோ பொட்டாஷ் உரத்துடன் கலந்து இட வேண்டும்.*

*5. தழைச்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடு (மஞ்சள் நோய் ) காணப்பட்டால் 2 கிலோ யூரியாவுடன் 1 கிலோ ஜிங்க் சல்பேட் கலந்து 200 லிட்டர் நீருடன் கைத்தெளிப்பான் கொண்டு இலைவழியூட்டமாக தெளிக்க வேண்டும்.*

*மேலும், இப்பருவத்திற்கு அனைத்து மாவட்டங்களுக்கும் தேவையான யூரியா 1,82,063 மெ.டன், டிஏபி 39,558 மெ.டன், பொட்டாஷ் 46,268 மெ.டன் மற்றும் காம்ப்ளக்ஸ் 1,18,106 மெ.டன் இரசாயன உரங்கள் தனியார் கடைகளிலும் தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.*

*வடகிழக்கு பருவமழை தொடர்ந்து டிசம்பர் மாத இறுதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவ்வப்போது ஏற்படும் பயிர் பாதிப்பு நிலவரங்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் கண்காணித்து வருவாய் துறையுடன் இணைந்து 33 சதவீதத்திற்கு மேல் பயிர் பாதிப்பை கணக்கீடு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த - வசதிகளை உருவாக்க

# தமிழ்நாடு சுற்றுலாத்துறை திட்டங்களுக்கான நிதி உதவிகளை விரைந்து வழங்குவீர்!

## ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை – அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் சந்தித்து கோரிக்கை!

*புதுடெல்லி, நவ.30-*

*தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ. கே.எஸ். விஜயன் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் மாநிலங்களவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோருடன் இணைந்து நேற்று முன்தினம் (28.11.2024) ஒன்றிய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை புது தில்லியில் சந்தித்தார்கள்.*

*இச்சந்திப்பின் போது தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து சுற்றுலாத்துறை மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு ஒன்றிய அரசின் அனுமதி மற்றும் நிதி உதவிக்காக இருக்கும் கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி உதவிகளை விரைவாக வழங்கிட கோரிக்கை விடுத்தார்கள்.*

**ஸ்வதேஷ் தர்ஷன் (2.0)**

*1) சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மாமல்லபுரம் கடற்கரை கோயில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் திட்டத்திற்கான ரூபாய் 30.02 கோடிகள்*

*2) நீலகிரி மாவட்டம் இயற்கை சுற்றுலா தலம் பைக்கராவில் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்திடும், திட்டத்திற்கு ரூபாய் 28.3 கோடி ஒதுக்கீடு.*

**சிறப்பு நிதியுதவி ( Special Assistance for State Capital Investment)**

*1. மாமல்லபுரத்தில் பாரம்பரிய நந்தவனம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 99 கோடி ஒதுக்கீடு.*

*2. உதகமண்டலம் தேவலாவில் சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் பூந்தோட்டம் அமைத்திட ரூ.72.58 கோடிகள்.*

*3. ராமேஸ்வரத்தினை முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தும் திட்டத்திற்கு ரூ.99 கோடி.*

**பிரசாத் திட்டம்**

*1. தமிழ்நாட்டில் அமையப்பட்டுள்ள எட்டு நவகிரக கோவில்களில் பிரசாத் திட்டத்தின் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் திட்டத்திற்கு ரூ.44.95 கோடி.*

*2. சுற்றுலா மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு 16 வது நிதிக்குழுவில் சுற்றுலா தலங்களில் உள்ள மராட்டியர்கள், நாயக்கர்கள் மற்றும் பாளையக்காரார்கள் எழுப்பிய பாரம்பரிய கட்டிடங்களை பாதுகாத்தல், புனரமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூ.3000 கோடியினை மற்றும் சுற்றுலாத் துறை வளர்ச்சியினை மேம்படுத்த ரூ.1200 கோடியினை வழங்கிட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டு ஒன்றிய அமைச்சர் அவர்கள் தலையிட்டு தமிழ்நாடு அரசு கோரிய நிதியினை 16வது நிதிக் குழு மூலம் வழங்க உரிய அழுத்தத்தை தர வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.*

*இச்சந்திப்பின் போது தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தி சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை உருவாக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்து கோரப்பட்டுள்ள அனைத்து நிதி உதவிகளையும் விரைவில் வழங்க வேண்டுகோள் விடுத்தார்.*

*இச்சந்திப்பின் போது தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன் மற்றும் சுற்றுலாத் துறை இயக்குநர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், ஆகியோர் உடன் இருந்தனர்.*

### தொழில் முனைவோர்களை மேம்படுத்தி திறனைப் பெருக்க

# ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் என்னென்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்கன் கேள்வி!

புதுடெல்லி, நவ.30-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர், எஸ். ஜெகத்ரட்கன் 25.11.2024 அன்று மக்களவையில், தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தவும், அவர்களின் திறனை மேம்படுத்தவும், ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் ஏதேனும் உள்ளதா? என்றும் அதற்கான விழிப்புணர்வு முகாம்களை நடத்த திட்டம் உள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அளித்த பதில் வருமாறு:

தொழில் முனைவோரின் கல்வியை மேம்படுத்தவும் அவர்களுக்கான பயிற்சி அளிக்கவும், ஒன்றிய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறையின் மூலம், தேசிய தொழில் முனைவோர் மற்றும் சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருவதாகவும், இந்த நிறுவனத்தின் வாயிலாக தொழில் முனைவோர் பயிற்சிகள் ஆகியன நடத்தப்பட்டு வருவதால் தொழில் முனைவோர்கள் மற்ற துறைகளின் மூலம் மேம்பாடு அடைந்து வருகிறார்கள் என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

தேசிய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் கொள்கை 2015-ன் படி, தொழில் முனைவோருக்கான, கணிணி வழி சந்தை மேம்பாடு, நிதியுதவி அளித்தல், தொழிற் துறையினருக்கான பயன்பாடு அதிகரித்துள்ளது என்றும், அச்சு ஊடகங்கள், சமூக ஊடகங்கள், கணினி வழி செயலிகள் ஆகியவற்றின் மூலம் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

ஒன்றிய அரசின், பல்வேறு துறைகளின் மூலம், தொழில் முனைவோர்களை மேம்படுத்தவும் அவர்களின் திறனை பெருக்கவும் கீழ்கண்ட நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது:

(அ) வீட்டுவசதி மற்றும் நகர வளர்ச்சி துறையின் மூலம் பிரதம மந்திரி கௌசல் விகாஸ் திட்டத்தின் படி, 40 சதவீத பெண்கள் உள்பட 2050 தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும்,

(ஆ) ஒன்றிய அரசின் பழங்குடியினர் அமைச்சகத்தின் மூலம் 18 மாநிலங்களில் பழங்குடியினரின் திறனை மேம்படுத்த ஒன்றிய அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும்,

(இ) உணவு மற்றும் பொது விநியோகத்துறையின் மூலம், 3000க்கும் அதிகமான பொது விநியோக கடையில் பணிபுரிவோரின் திறனை மேம்படுத்த தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது என்றும்,

(ஈ) வடகிழக்கு மாநிலங்களில் அமைந்துள்ள 100க்கு மேற்பட்ட மாவட்டங்களில் 36000க்கும் அதிகமான பயனாளிகளுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது என்றும்,

(உ) புதுப்பிக்கத் தக்க சக்தி அமைச்சகத்தின் மூலம், இலவச சூரிய மின்சாரத்திட்டத்தின்படி சூரிய சக்தியின் வழி, மின்சார உற்பத்தியை பெருக்க அரசு உதவியுடன் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும்,

(ஊ) ஒன்றிய அரசின் நிதி சேவைகள் துறையின் மூலம், பிரதம மந்திரி முத்ரா திட்டத்தின் படி வங்கிகளின் வழியாக கிஷோர், மற்றும் தருண் என்ற பெயரில் ரூ.50,000 முதல் ரூ.20,00,000 வரையிலான கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு ஒன்றிய இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி பதிலளித்தார்.



பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவையொட்டி பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் க. இராஜேந்திரன் தலைமையில் கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, பண்ருட்டி அரசு மருத்துவமனையில் உள்ள தாய்மார்கள், கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டவர்களுக்கு பிரட் ரஸ்க் பிஸ்கட் பழங்கள் உள்ளிட்ட நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ஆனந்தி சரவணன், நகர மன்ற துணைத் தலைவர் சிவா, நகர அவைத் தலைவர் ராஜா, நகர துணைச் செயலாளர் கௌரி, அன்பழகன் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணி சந்தர், மாவட்ட பிரதிநிதி சரவணன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராம்குமார், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் சங்கர், கழகத்தின் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் உட்பட பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



திருவாரூர் ஒன்றியம் கல்லிக்குடி ஊராட்சியில் கனமழையின் காரணமாக சாலையில் ஏற்பட்ட மண் அரிப்பினை மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பார்வையிட்டு சாலை செப்பனிடும் பணிகளை மேற்கொண்டார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா மற்றும் கழகத்தினர் இருந்தனர்.